**MCOP NO: 997/2025,998/2025(Joint Trial)** **DATE: 17.03.2026**

ம.சா : 1

பெயர் : திரு.அன்புமணி 997/2025

த/பெ : திரு.கொளஞ்சி

வயது : 18

**முதல் விசாரணை**

நான் 997/2025 மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 14 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் என் அம்மா பெயரில் உள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனக்கு வயது 17 ஆகும். அந்த சமயத்தில் எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. அதற்கு பின்னிட்டும் நான் ஓட்டுநர் உரிமம் வாங்கவில்லை. ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இருசக்கர வாகனத்தை ஓட்டுவது தவறு என்றால் சரிதான். ஓட்டுநர் உரிமம் இல்லாமல் பல்சர் வாகனத்தை தேசிய நெடுஞ்சாலையில் ஓட்டி சென்றேன் என்றால் சரிதான். நான் சாலையை குறுக்கே கடப்பதற்காக நின்று கொண்டிருந்த போது தான் இந்த விபத்து ஏற்பட்டது. நான் தாக்கல் செய்தள்ள மாதிரி வரைபடத்தில் விபத்தின் போது நான் சாலையை குறுக்கே கடப்பதற்காக சாலையின் மத்திய பகுதியில் நின்று கொண்டிருந்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமலும், கவனகுறைவாகவும் நான் சாலையை கடப்பதற்காக சாலையின் மத்திய பகுதியில் திடீரென நின்றதால் தான் எனக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய அஜாக்கிரதை தான் காரணம் என்பதால் நான் தாக்கல் செய்துள்ள மனுவானது தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நானும், என்னுடைய சித்தப்பா பாண்டியனும் தலைகவசம் அணியாமல் சென்றதால் தான் என் சித்தப்பாவிற்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் என்ன படிப்பு படித்தேன் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனது முதல் பிரமாண பத்திரிக்கையும், மனுவிலும் எனக்கு விபத்தில் ஏற்பட்ட காயத்தினால் என்னால் என்ன காரணத்தினால் மேல் படிப்பு படிக்க முடியவில்லை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மசாஆ 6 மருத்துவ பில்களுக்கு உண்டான பரிந்துரை

கடிதங்களை தாக்கல் செய்யவில்லை. எனக்கு விபத்தினால் இடது பக்க தோள்பட்டை, கால் மற்றும் கை ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டது. 2024 ற்கு பின்னிட்டு மீனாட்சி மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னிட்டு நான் தொடர்சிகிச்சை செய்து வருகிறேன் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனக்கு ஏற்பட்ட காயங்களினால் உடல் ரீதியான பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. மசாஆ 11 ஆன குற்றப்பத்திரிக்கையின் படி எனக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் என்று தான் காட்டப்பட்டுள்ளது. எனக்கு விபத்தினால் உடல் ரீதியாகவோ, தொழில் ரீதியாகவோ எந்த இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இருசக்கர வாகனத்தை ஓட்டி நானே விபத்தை ஏற்படுத்திக்கொண்டதால் 2ம் எதிர்மனுதாரர் எந்தவித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு 17.03.2026 ல் அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.